# பல்லுறுதி கூட்டும் இரசாயனக் கலவைப் பூச்சு

**[Topical Fluoride]**

### பல்லுறுதி கூட்டும் இரசாயனக் கலவைப் பூச்சு என்பதுஎன்ன? இது ஏன் எனக்குத் தேவைப்படுகிறது?

பல்லுறுதி கூட்டும் இரசாயனக் கலவைப் பூச்சு (Topical Fluoride) என்பது பல் மருத்துவர் உங்கள் பற்கள்மீதுபூசும் வெண்ணிற மெருகு. பற்பசையை விட இதில் சோடியம்புளோரைட் அதிகளவில் 22,600ppm (ஒரு மில்லியனில் உள்ளபாகங்கள்) உள்ளது. பற்பசையில் வழக்கமாக 1,450ppmசோடியம் புளோரைட் தான் இருக்கும். எனவே, சாதாரணமாகக்கடைகளில் வாங்கும் வாய் கொப்பளிக்கும் திரவங்கள்,பற்பசைகள் ஆகியவற்றைவிட இந்த இரசாயனக் கலவைப் பூச்சுஅதிக வலிமைமிக்கது.

பல் மருத்துவர் அல்லது வாய்ச் சுகாதார சிகிச்சையாளர்அதிகளவு இரசாயனக் கலவைப் பூச்சை நேரடியாகப்பூசும்போது, பல்லின் வெளிப்பகுதி (எனாமல்) வலுவடையும்.வலுவான எனாமல் உள்ளே இருக்கும் நரம்புகளைப்பாதுகாக்கும். இதன்வழி, சாப்பிடும்போது அல்லதுகுடிக்கும்போது பல்லில் ஏற்படும் கூசும் உணர்வுகுறையும். அதோடு, பல்சொத்தையும் தவிர்க்கப்படும்.

**இது பாதுகாப்பானதா?**

பல் மருத்துவர் அல்லது வாய்ச் சுகாதார சிகிச்சையாளர்பூசும் இரசாயனக் கலவைப் பூச்சை விழுங்குவதுபாதுகாப்பானதே. ஆனால், இரசாயனக் கலவைப் பூச்சை பூசியபிறகு குறைந்தது 30 நிமிடங்களுக்குச் சாப்பிடாமலும்,எதுவும் குடிக்காமலும், துப்பாமலும், வாயைக்கொப்பளிக்காமலும் இருக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.இரசாயனக் கலவைப் பூச்சால் ஒவ்வாமை ஏற்படுவது அரிது.ஆயினும், ஏதேனும் எதிர்விளைவுகள் தென்பட்டால்எங்களிடம் தெரியப்படுத்தவும்.

**இது எவ்வளவு காலத்திற்கு நீடிக்கும்? இதனை எத்தனைமுறைபூசவேண்டும்?**

பல்லுறுதி கூட்டும் இரசாயனக் கலவைப் பூச்சு சிகிச்சைகள்குறுகிய நேரமே வாயில் நீடித்திருக்கும் என்றாலும்,அதிலுள்ள மூலப்பொருள்,சிகிச்சை முடிந்து பலமணிநேரத்திற்கு உச்சநிலையில் செயல்படும்.

பல்லுறுதி கூட்டும் இரசாயனக் கலவைப் பூச்சு எத்தனை முறைபூசப்படவேண்டும் என்பது பற்றி உங்களது பல் மருத்துவர்உங்களுக்கு ஆலோசனை கூறுவார். உங்கள் பல்லில் சொத்தைவிழக்கூடிய அபாயத்தைப் பொறுத்து இது நிர்ணயிக்கப்படும்.

உங்களுக்கு ஏதேனும் அக்கறைகள் இருந்தால், தயவுசெய்துஎங்கள் அலுவலர்களை அணுகுங்கள்.



© National Healthcare Group Polyclinics Pte Ltd 2025. All rights reserved. All information correct as of Sep 2025. No part of this document may be reproduced, copied, reverse compiled, adapted, distributed, commercially exploited, displayed or stored in a database, retrieval system or transmitted in any form without prior permission of National Healthcare Group Polyclinics Pte Ltd. All information and material found in this document are for purposes of information only and are not meant to substitute any advice provided by your own physician or other medical professionals.